# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044- 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். **164/ந/2017**

ஆணை எண். **7/2018**

நாள் : **09/01/2018**

திரு கு. கண்ணன்,
நெல்லிக்குப்பம்.

– **முறையீட்டு மனுதாரர்**

நகராட்சி நிர்வாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை – 5.

– **எதிர் மனுதாரர்**

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம் நெல்லிக்குப்பம், எண்.67, தமிழ் கருமாரத் தெரு முகவரியில் வசிக்கும் திரு கு. கண்ணன் அவர்களின் 18.09.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.09.2017 அன்று பெறப்பட்டு 164/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர் சமர்ப்பித்துள்ள ஆவணங்கள் மற்றும், நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவை பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம் நெல்லிக்குப்பம், எண்.67, தமிழ் கருமாரத் தெரு முகவரியில் வசிக்கும் திரு கு. கண்ணன் என்பவர் தான் நெல்லிக்குப்பம் நகராட்சியில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றிய போது பணியிடம் காலியின்மையால் 01.05.1976 முதல் 16.07.1978 வரை பணிநீக்கத்தில் வைக்கப்பட்டிருந்ததாகவும், இந்நிலையில், அந்நகராட்சியில் நிரந்தரப் பணியாளராகப் பணியாற்றி வந்த செல்வி கே. இராஜலட்சுமி அவர்கள் 17.09.1975 அன்று பணி ராஜிநாமா செய்ததைத் தொடர்ந்து அவரது பணியிடத்தில் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் திருமதி P. சரஸ்வதி என்பவரை 17.07.1978–இல் பணி நியமனம் செய்யப்பட்டது 16.11.1968 நாளிட்ட ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிர்வாகத் துறை அரசு ஆணை (எம்.எஸ்) எண்.2339–க்கு முரணானது எனத் தெரிவித்தும் தன்னை பணி காலியிடத்தில் பணிநியமனம் செய்ய வேண்டியும், பணிநீக்க காலத்தை ஒய்யூதியத்திற்கு முறைப்படுத்த கோரிய தனது மேல்முறையீடுகள் நிராகரிக்கப்பட்டது குறித்தும் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் பணி முறிவு காலத்தினை, ஓய்வூதியப் பயன்கள் வழங்குவதற்கு மட்டுமே முறைப்படுத்தலாம் எனத் தெரிவித்து 16.02.2015 நாளிட்ட நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையரின் கடித எண்.1068/C1/2014–இல் நகராட்சி நிர்வாக ஆணையருக்கு கருத்துரு அனுப்பப்பட்டது. மேற்குறிப்பிட்ட கடித்தில் அனுப்பப்பட்ட கருத்துருவினை பரிசீலனை செய்த நகராட்சி நிர்வாக ஆணையர், தனது 05.10.2015 நாளிட்ட கடித எண்.1221/கே2/2015–இல் 1978–ஆம் ஆண்டு, தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், விதி எண்.24–இன் படி ஒரு பணியாளர் பணிநீக்கம் செய்யப்பட்டு திரும்பவும் பணியமர்த்தம் செய்யும் பொழுது, அவருடைய தடைபட்ட பணிக்காலத்தை ஓய்வூதியத்திற்கு கொணர இயலாது எனத் தெரிவித்து நகராட்சி ஆணையரின் கருத்துருவினை நிராகரித்துள்ளார்.

3. இந்நேர்வில் முறையீட்டு மனுதாரர் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஆணையினை எதிர்த்தே இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டப் பிரிவுகளின் கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை நடவடிக்கையினை எதிர்த்து மேற்கொள்ளப்படும் முறையீட்டு மனு எதனையும் இம்முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்கசு இயலாது. மேலும், தமிழ்நாடு உள்ளாட் சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டப் பிரிவு 10 (4) (c) இன் படி முறையீடு செய்துள்ளவர்க்கு பிற தீர்வுகள் கிடைக்கத் தக்கதாக இருக்கும் போது மற்றும் வழக்கின் சூழ்நிலைகளின் நோக்கில் அத்தகைய தீர்வுகளைப் பெறுவது மனுதாரருக்கு அதிகப்படியான நலனை தரக்கூடியதாக இருக்கும் என இம்முறைமன்ற நடுவம் கருதுவதால் அவ்வாறே மனுதாரருக்கு தெரிவித்துக்கொண்டு மனுாரரின் முறையீட்டு மனுவினைத் தள்ளுபடி செய்து ஆணையிடுகிது.

2018– ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள், 9–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

10.1.18

10/1/18

பெறுநர்

1. திரு கு. கண்ணன்,
கதவு எண்.67, தமிழ் கருமாரத் தெரு,
நெல்லிக்குப்பம், பண்ருட்டி வட்டம்,
கடலூர் மாவட்டம் – 607 105.

2. நகராட்சி ஆணையர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி, நெல்லிக்குப்பம்.

3. நகராட்சி நிர்வாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை – 5.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி